விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 084 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 29 திங்கட்கிழமை (13.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

# உரிய தினத்தில் நிதி கிடைக்காவிட்டால் தேர்தலை நடத்துவது கேள்விக்குறியே?

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

உரிய தினத்தில் நிதி கிடைக்காவிட்டால் தேர்தலை நடத்துவது கேள்விக்குறியே என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துரைத்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ளது.

அதேநேரம் அஞ்சல்மூலவாக்களிப்பினை இம்மாதம் 28ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

அதேநேரம் போதிய கால அவகாசம் இல்லை என அரச அச்சகமும் தெரிவித்துள்ளது.

எனவே எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முற்பணம் ஏதும் கிடைக்காவிட்டால் உரிய திகதிகளில் தேர்தலை நடத்துவது கேள்விக்குறியாகலாம்.

தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்ள இம் மாதம் இறுதிவரை திறைசேரியிடம் இருந்து மொத்தம் ஆயிரத்து 100 மில்லியன் ரூபாய் தேவைப்படுவதாகவும் இதுவரை தமக்குமுற்பணமான 500 மில்லியன் 11

# எரிபொருள் விலை குறைக்கப்படும்

## எரிசக்தி அமைச்சர் கஞ்சன

(கொழும்பு)

டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் எதிர்வரும் நாட்களில் எரிபொருளின் விலை குறைக்கப்படும் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள விலை திருத்தத்தில் மக்களுக்கு நிவாரணம் வழங்க எதிர்பார்த்துள்ளதாகவும் டொலரின் பெறுமதி வீழ்ச்சியுடன் 11



# உள்ளூராட்சித் தேர்தல் அத்தியாவசியமானது



## இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு)

இலங்கைக்கு உள்ளூராட்சி மன்ற தேர்தல் அத்தியாவசியமானது என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். 11

# தமிழர்களின் பிரச்சினைக்கு குரல் கொடுக்கத் தயார்

## யாழில் வசந்த முதலிகே

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் வரை போராடுவோம் என 11



# ஆனையிறவில் 27 அடி உயரமான நடராஜர் சிலை பிரதிஷ்டை



10

# நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் ஒன்றுகூடுதல், கருத்து சுதந்திரம் உண்டு

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

(கொழும்பு)

ஜனநாயக நாடான இலங்கையில் அனைத்து பிரஜைகளுக்கும் ஒன்றுகூடுதல் மற்றும் கருத்துக்களை வெளியிடுவதற்கான சுதந்திரம் காணப்படுவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த உரிமை தொழிற்சங்கங்கள், தொழிற்சங்க அமைப்புகள், மாணவர்கள் மற்றும் தனிநபர்கள் உள்ளிட்ட நாட்டின் வெவ்வேறு தரப்பினருக்கும் பொருந்துமென ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதுபோன்ற உரிமைகள் வெளிப்படுத்தப்பட்ட பல சந்தர்ப்பங்களில் ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்காக சட்டத்தை 11

### பாராளுமன்ற சிறப்புரிமையின் போர்வையில்

# தேர்தல்கள் ஆணைக்குழு மீது அரசு அழுத்தம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

பாராளுமன்ற சிறப்புரிமைகள் என்ற போர்வையில் நீதித்துறை மீதும் தேர்தல் ஆணைக்குழு மீதும் அரசாங்கம் அழுத்தம் பிரயோகிக்கிறது என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் 11

# விமான ரிக்கெட் விலை மேலும் குறைவடைந்தது

(கொழும்பு)

டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி அதிகரிப்பின் காரணமாக விமான ரிக்கெட்டுக்களின் விலை மேலும் குறைந்துள்ளது.

சுமார் ஐந்து வீத [illegible] 11

# மக்கள் அவதானத்துடன் போராட வேண்டும்

## உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் கொள்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்பற்றுகின்றார்.

ஆகவே, ஜனநாயகத்துக்காக போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் அவதானத்துடன் செயற்பட 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குரிமையை பாதுகாக்க எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து போராட வேண்டும்

## விஜித ஹேரத் தெரிவிப்பு

(கொழும்பு)

அறிவிக்கப்பட்ட திகதியில் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெறுமா அல்லது அரசாங்கத்தின் நோக்கத்திற்கு அமைய தேர்தல் பிற்போடப்படுமா என்ற சந்தேகம் காணப்படுவதாக விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஆகவே வாக்குரிமையை பாதுகாக்க சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைத்து போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் அழைப்பு விடுத்தார்.



அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைளை கடந்த 9 ஆம் திகதி ஆரம்பித்துள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை பிற்போட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் நீதிமன்றம் முற்றுப்புள்ளி வைத்துள்ளதாக குறிப்பிட்டார்.

இருப்பினும் தற்போது பாராளுமன்ற சிறப்புரிமையை குறிப்பிட்டுக் கொண்டு ஆளும் தரப்பினர்கள் தேர்தலுக்கு தடையேற்படுத்த முயற்சிப்பதாக விஜித ஹேரத் குற்றம் சாட்டினார். (ம-7)

# யூரியா உரத்தின் விலை மேலும் குறைவடையும்

## விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர

(கொழும்பு)

10 ஆயிரம் ரூபாயுக்கு விற்பனை செய்யப்பட்டு வரும் யூரியா உரத்தின் விலை எதிர்வரும் சிறு போகத்தில் மேலும் குறைக்கப்படும் என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அதற்கமைய ஒரு மூடை யூரியா உரத்தின் விலை 7,500 ரூபாய் முதல் 9 ஆயிரம் ரூபாயாக குறைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் என்றார்.

அகுனகொலபலஸ்ஸ பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்கு சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட எரிபொருளை விநியோகிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஒரு ஹெக்டேயருக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் 650 கோடி ரூபாய் வரவு வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

உடனடியாக பணம் கிடைக்காத விவசாயிகளுக்கு மேலும் 150 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கும் விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதுகாப்பதற்காகவும் இந்தச் சலுகைகள் அனைத்தும் விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## தமிழ்க் கட்சிகள் மத்தியில்

# கொள்கை அளவில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது

(கொழும்பு)

பாராளுமன்றத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் கட்சிகள் ஒருமித்துச் செயற்படுவதற்கு முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளில் கொள்கை அளவில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ, தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய தரப்புக்களுக்கிடையில் முதற்கட்ட பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

குறித்த பேச்சுவார்த்தையின்போது கொள்கையளவில் இணக்கம் ஏற்பட்டுள்ளதாக அப்பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட தரப்பின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனான ஆரம்பப் பேச்சுக்கள் திருப்திகரமான நிலையில் இல்லாத சூழலில் மீண்டும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேபோன்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸுடன் அடுத்து வரும் காலத்தில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ம-7)

# காங்கேசன் துறையில் வெடிபொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வீமன்காமம் பகுதியில் கண்ணிவெடி ஒன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த கண்ணிவெடியானது தனியாருக்கு சொந்தமான வெற்றுக் காணி ஒன்றில் மண்ணில் புதைந்த நிலையில் இருந்துள்ளது.

அதேநேரம் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அன்ரனிபுரம் பகுதியில் கடலில் கரையொதுங்கிய நிலையில் கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. காங்கேசன்துறை பொலிஸார் இது தொடர்பாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், நீதிமன்றத்தின் நடவடிக்கையின் பின்னர் அந்த வெடிபொருட்களை மீட்டு செயலிழக்க செய்யவுள்ளனர். (ம-7,104)

# ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி

## கதிரவேலு சின்னமணி



தோற்றம் 27 . 09 . 1948

மறைவு 23 . 02 . 2022

அன்னாரின் 1 ஆம் ஆண்டு திதி 14.03.2023 செவ்வாய்க்கிழமை அன்று புளியங்கண்டு வீதி, ஆனைக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறுகிறது.

எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
இருந்தாயே அம்மா
உம் ஞாபகத்தில் வெதும்பி வெதும்பி
அழுகிறோம் அம்மா

உங்கள் பிரிவில் நாம்
அதிர்ச்சியில் இருக்கிறோம் அம்மா

உங்கள் இடம் பெருவெளியாய்
கிடக்கிறதே அம்மா
நீங்கள் சென்று ஓராண்டு
ஓடி மறைந்தாலும் அம்மா

உங்கள் ஒளிமுகத்தை முன்னிறுத்தி
உங்கள் நினைவுகளுடன்
வாழ்கின்றோம் அம்மா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(14884)

தகவல் : குடும்பத்தினர் - மகன் (சாந்தசீலன்) 077 277 6240

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு உதவுவதற்கான வாய்ப்பை
# ஜி-20 நாடுகள் தவறவிட்டுள்ளன
## சர்வதேச மன்னிப்புச்சபை அதிருப்தி

(கொழும்பு)

**ஜி-20 நாடுகள் அமைப்பு செயற்றிறன் மிக்க வகையில் ஒருங்கிணைந்தால் இலங்கைக்கு அவசியமான கடனையும் மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளை பாதுகாத்து வலுப்படுத்தவும் முடியும் என சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.**

கடன்நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கைக்கு உதவுவதற்கான வாய்பை ஜி-20 நாடுகள் தவறவிட்டுள்ளது.

இலங்கை மக்கள் முகங்கொடுத்திருக்கும் சவால்களுக்குத் தீர்வு காண்பது குறித்து வெறுமனே மேம்போக்காக மாத்திரமே அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபை அதிருப்தி வெளியிட்டுள்ளது.

எவ்வாறாயினும் 22 மில்லியன் மக்களின் உரிமைகளில் ஏற்பட்டுள்ள இந்த தாக்கத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் எனில் இக்கடன் நெருக்கடியிலிருந்து நாடு விடுபட வேண்டும்.

அதேவேளை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சியடைவதை முன்னிறுத்தி சர்வதேச நாணய நிதியம் உள்ளடங்கலாக வெவ்வேறு தரப்புக்களுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் பேச்சுகள் வெளிப்படைத்தன்மை கொண்டவை என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது. (நி)

# பணம் கிடைக்காவிட்டால் புதிய திகதி-நிமல் புஞ்சிஹேவா

(கொழும்பு)

நாளை மறுதினம் புதன் கிழமைக்குள் திறைசேரி 500 மில்லியன் ரூபாவை வழங்காவிட்டால் அஞ்சல் மூல வாக்குகளுக்கான புதிய திகதியை அறிவிக்க நேரிடும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதியாக ஏப்ரல் 25 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அஞ்சல் மூல வாக்களிப்புக்களுக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரை காலம் குறிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அஞ்சல் வாக்குகளை அச்சிடுவதற்கு போதிய கால அவகாசம் இல்லை என அரசாங்க அச்சகப் பணியாளர் கங்கானி லியனகேயும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் தொடர்பான 2,500 அச்சுப் பணிகள் முடிக்கப்பட உள்ளன, ஆனால் இதுவரை 54 மட்டுமே செய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். (நி)

# ரூபாவின் மதிப்பு மேலும் உயரும்
## பொருளாதார நிபுணர்கள் சங்கம்

(கொழும்பு)

ரூபாவின் மதிப்பு மேலும் உயரலாம். டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு அதிகரித்து வருவதால், வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்படும் பொருட்களின் விலை படிப்படியாக குறைய வேண்டும் என கொழும்புப் பல்கலைக்கழக பொருளாதாரத் துறையின் முன்னாள் பீடாதிபதி மற்றும் இலங்கைப் பொருளாதார நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் விஜிதப்ரே விமலரதன தேரர் தெரிவித்துள்ளார்.

ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பு மற்றும் அதன் விளைவுகள் குறித்து பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செய்தியில் தேரர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ரூபாவின் மதிப்பு கேள்வி மற்றும் விநியோகத்தால் தீர்மானிக்கப்படுகிறது. சமீப காலமாக ரூபாவின் மதிப்பு படிப்படியாக அதிகரித்து வருகிறது.

டொலர் கையிருப்பு அதிகரிப்பு, கிடைக்கவிருக்கும் ஐ.எம்.எப் மானியம், சுற்றுலா மற்றும் வெளிநாட்டு தொழிலாளர் வருமானம் ஆகியவை டொலர் பெறுமதி அதிகரிப்பை பாதித்துள்ளன.

இதன் காரணமாக யூக நோக்குடன் டொலர்களை சேமித்து கொண்டிருந்தவர்கள் தற்போது அந்தப் பணத்தை வெளியே கொண்டுவருகிறார்கள். அதனால் ரூபாவின் மதிப்பு மேலும் உயரலாம்.

டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு அதிகரித்து வருவதால், வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரப்படும் பொருட்களின் விலை படிப்படியாக குறைய வேண்டும். இது மக்களுக்கு பெரும் நிம்மதியை அளிக்கும்.

கடந்த காலங்களில் பெருமளவு இலாபம் பெற்று வந்த ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த சலுகைகள் தற்போது படிப்படியாக குறைந்து வருகிறது.

இப்போது வெளிநாட்டுத் தொழிலாளர்கள் கூட தங்கள் பணத்தை இலங்கைக்கு அனுப்பத் தொடங்கியுள்ளனர். பணவீக்கமும் குறையத் தொடங்கியுள்ளது.

ஆனால் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஏதேனும் ஒரு வகையில் தளர்த்தப்பட்டால், இந்த ரூபாவின் மதிப்பு ஏதோ ஒரு வகையில் குறைவதைக் காணலாம். இருப்பினும், இந்த நிலைமை பொருளாதாரத்திற்கு ஒரு நல்ல அறிகுறியாகும்.

இருப்பினும், மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர, ஏற்றுமதியை ஊக்குவிக்க வேண்டும். நாங்கள் இன்னும் கடனுக்காக காத்திருக்கிறோம். அப்போது நாங்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்காததால் இந்த நிலை ஏற்பட்டது.

சுதந்திரத்திற்குப் பிறகு, எங்களிடம் வலுவான பணமும் இல்லை, அந்நியச் செலாவணியும் இல்லை. அதிலிருந்து நாம் பாடம் கற்கவில்லை. எதிர்காலத்தில் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். இது குறித்து ஏற்றுமதியாளர்களுடன் கலந்துரையாட வேண்டும்.

வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வர வேண்டும். நாம் கிராம மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தாமல் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (நி)

யாழ் இந்திய துணைத் தூதரகம், மற்றும் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில்

சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள்

G20 भारत 2023 INDIA
सत्यमेव जयते
Azadi Ka Amrit Mahotsav

இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்
ஏற்பாடு செய்துள்ள

சிறப்பு பட்டிமன்றம்

இளம் தலைமுறையை வழி நடத்த வேண்டிய பொறுப்பு...

பெற்றோருக்கே! சமூகத்திற்கே!

நடுவர்







இந்தியாவின் பிரபல
பட்டிமன்றப் பேச்சாளர்
திருமதி. கவிதா ஜவகர்

காலம் : 14 மார்ச், 2023 நேரம் : மாலை 5.00 மணிக்கு
இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்

सत्यमेव जयते
Azadi Ka Amrit Mahotsav

யாழ் இந்திய துணைத் தூதரகம் மற்றும் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு
இணைந்து நடாத்தும்

"பாலின சமத்துவத்திற்கான புதுமை மற்றும் தொழில்நுட்பம்"
எனும் தொனிப்பொருளில்
நிகழ்வுகள்



- பெண் தொழில் முயற்சியாளர்களின் வர்த்தக கண்காட்சியும் விற்பனையும்.
- மாகாண ரீதியில் சிறந்த பெண் சாதனையாளர்களைக் கௌரவித்தல்
- மாகாண ரீதியில் சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்களை கௌரவித்தல்
- சர்வதேச மகளிர் தின சிறப்புரை இந்தியாவின் பிரபல பட்டிமன்றப் பேச்சாளர் திருமதி.கவிதா ஜவகர்
- சிறந்த பெண் தொழில் முயற்சியாளர்கள் பற்றிய பார்வை - விபரணச்சித்திரம்


இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
காலம் : 15 மார்ச் 2023, 9.00 மணி முதல் 2.00 மணி வரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்
(C-6146)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்ரம்-ராஜன்-கங்கு வெற்றிக்கிண்ணம் -2023

# கிறாஸ்கொப்பர்ஸ் அணி வெற்றி



விக்ரம்-ராஜன்-கங்கு கிரிக்கெட் தொடருக்கான 1 ஆவது தகுதி காண் போட்டியில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி, ஓல்ட் கோல்ஸ் அணியை 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

. முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 210 ஓட்டங்களை பெற்றது.

நிமலேந்திரா-48, நிரோகன்-35, பிரியலக்ஸன்-45,கஜேந்திரன் ஆட்டமிழக்காது 47 ஓட்டங்களை பெற்றனர்.

பந்துவீச்சில் கிறாஸ் கொப்பர்ஸ் அணியை சார்ந்த மதூரஸன் 6 ஓவர்களில் 37 ஓட்டங்களை கொடுத்து 1 விக்கெட்டினையும், ஜனன்தன் 5 ஓவர்களில் 37 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுகளையும் சுஜீவன் 6 ஓவர்களில் 56 ஓட்டங்களை கொடுத்து 1 விக்கெட்டினையும் அஜித் 6 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டினையும் ரசிகரன் 6 ஓவர்களில் 30 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

211 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 27.5 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 211 ஓட்டங்களை பெற்றுள்ளது .

கோகுலன்-15,மதூரஸன்-89, அஜித்-15, டிலோஸன்-45, ஜனன்தன் ஆட்டமிழக்காது32 ஓட்டங்களைப் பெற்றனர்.பந்து வீச்சில் ஓல்ட் கோல்ஸ் அணியை சார்ந்த நர்தனன் 6 ஓவர்களில் 40 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டி னையும் கஜேந்திரன் 5.2 ஓவர்களில் 33 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டினையும் நிரோஸன் 6 ஓவர்களில் 65 ஓட்டங்களைக் கொடுத்து 1விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் -விளையாட்டுக்கழகம் 14 ஆவது வருடமாக நடத்திவரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வுக்கு கிறஸ்கொப்பர்ஸ் அணி 6.51 புள்ளிகளையும் ஓல்ட் கோல்ஸ் அணி 2.60 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (கு)

# சர்வதேச கிரிக்கெட்டில் முதல் சதம் விளாசிய இளம் வீரர்



இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அவுஸ் திரேலியாவின் இளம் வீரர் கேமரூன் கிரீன் முதல் சர்வதேச சதத்தை பதிவு செய்தார்.

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி அகமதாபாத்தில் நடந்து வருகிறது. அவுஸ் திரேலிய அணி முதல் இன்னிங்ஸில் 480 ஓட்டங்கள் குவித்தது.

இதில் கவாஜா 180 ஓட்டங்கள் குவித்த நிலையில், கேமரூன் கிரீன் 114 ஓட்டங்கள் எடுத்தார்.

23 வயதாகும் கேமரூன் கிரீன் சர்வதேச கிரிக்கெட்டில் அடித்த முதல் சதம் இதுவாகும். 20 ஆவது டெஸ்டில் விளையாடும் கிரீன், ஒரு சதம் மற்றும் 6 அரைசதங்களுடன் 941 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

முதல் இன்னிங்ஸில் களமிறங்கிய இந்திய அணி, இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 36 ஓட்டங்கள் எடுத்துள்ளது. (4)

# நெய்மருக்கு வெற்றிகரமாக அறுவை சிகிச்சை



பாரிஸ் செயின்ட் ஜேர்மன் அணியின் நட்சத்திர வீரர் நெய்மருக்கு காலில் வெற்றிக ரமாக அறுவை சிகிச்சை செய் யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசிலின் நட்சத்திர வீரரான நெய்மர் பாரிஸ் செயின்ட் ஜேர்மன் கிளப் அணியில் விளையாடி வருகிறார். லில்லி அணிக்கு எதிரான போட்டியில் ஏற்பட்ட கணுக்கால் காயத்தினால் நெய்மர் அவதிப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து அவர் நடப்பு சீசனில் பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப்பட்டது. அதன் பின்னர் சம்பியன்ஸ் லீக் தொடரில் பாயர்ன் முனிச் அணிக்கு எதிராக 0-2 என்ற கோல் கணக்கில் பாரிஸ் செயின்ட் அணி தோல்வியுற்றது.

இந்த நிலையில், நெய்மருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாக பாரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி கூறியுள்ளது. இதுகுறித்து PSG வெளியிட்ட அறிக்கையில், "நெய்மருக்கு கடந்த வெள்ளிக்கிழமை காலை தோஹாவில் உள்ள ASPETAR மருத்துவமனையில் பேராசியர்களான பீட்டர் டி ஹூ"க், ஜேம்ஸ் கால்டர் மற்றும் ரோட்ரிகோ லாஸ்மர் ஆகியோர் அறுவை சிகிச்சை செய்தனர். அவர் இப்போது பராமரிப்பு நெறிமுறையை பின்பற்றி ஓய்வெடுப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## 200 மீற்றர் பின்னோக்கிய நீச்சலில் ஆஸி. வீராங்கனை உலக சாதனை




பெண்களுக்கான 200 மீற்றர் பின்னோக்கிய நீச்சல் போட்டியில் அவுஸ்திரேலியாவின் கெய்லீ மெக் கோவ்ன் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

சிட்னியில் நேற்று முன்தினம் ஆரம்பமான நியூ சௌத் வேல்ஸ் மாநில பகிரங்க நீச்சல் சம்பியன்ஷிப் போட்டிகளில் 2 நிமிடங்கள், 3.14 விநாடிகளில் நீந்தி புதிய உலக சாதனையை கெய்லி மெக்கோவ்ன் நிலைநாட்டினார்.

அமெரிக்காவின் ரேகான் ஸ்மித் 2019 ஆம் ஆண்டு உலக நீச்சல் சம்பியன்ஷிப் போட்டிகளில் 2 நிமிடம் 3.35 விநாடிகளில் நீந்தியமையே இதுவரை உலக சாதனையாக இருந்தது.

21 வயதான கெய்லீ மெக் கோவ்ன், 100 மீற்றர் பின்னோக்கிய நீச்சல் உலக சாதனையாளராகவும் விளங்குகிறார் . இவர் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் 3 தங்கப் பதக்கங்களையும் வென்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# பயிற்சி ஆட்டத்தின் போது சிக்சர்களை பறக்கவிட்ட டோனி



சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கப்டன் பயிற்சி ஆட்டத்தின் போது சிக்சர்களை அடிக்கும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

உலக அளவில் மிகவும் பிரபலமான ஐ.பி.எல் போட்டி விரைவில் தொடங்க உள்ளது.

இந்த நிலையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கப்டனான மகேந்திரசிங் டோனி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் பயிற சியில் ஈடுபட்டுள்ளார்.

பயிற்சியின் போது டோனி தொடர்ந்து சிக்சர்களை அடிக்கும் வீடியோவை சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அதிகாரபூர்வமான டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

இந்த வீடியோவை பார்த்த ரசிகர்கள் டோனியின் ஆட்டத்தை மீண்டும் பார்க்க விருப்பதாக கூறி கருத்துகளை தெரிவித்துள்ளனர். சென்னை சுப்பர் கிங்ஸ் நிறுவனம் வெளியிட்ட அந்த வீடியோ டுவிட்டரில் ட்ரெண்ட் ஆகியுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி தொடங்கவுள்ள ஐ.பி.எல் போட்டியில் முதலாவதாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் நடப்பு சம்பியனான குஜராத் டைட்டன்ஸ் அணியும் மோதுகிறது. கிரிக்கெட் இரசிகர்கள் இந்தப் போட்டிகளை காண ஆவலோடு காத்திருக்கிறார்கள். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுமட்டுவாழ் தெற்கு விவசாயிகளுக்கு இன்று இலவச டீசல் விநியோகம்

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான இலவச டீசல் விநியோகம் இன்று திங்கட்கிழமை இடம்பெறவிருப்பதாக கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவிக்கையில்

டீசலுக்கான பதிவுகள் திங்கட்கிழமை காலை சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் இடம்பெறும்.

குறித்த தினத்தில் 2023 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரியினைச் செலுத்தி எரிபொருளுக்கான டோக்கனைப் பெற்று தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

4 பரப்பிற்கு ஒரு லீற்றர் என்ற அடிப்படையில் 12 பரப்பிற்கும் 60 பரப்பிற்கும் இடைப்பட்ட வயல் நிலத்தில் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என அவர் தெரிவித்துள்ளார். (நி-30)

# யாழில் இருந்து மாடுகளைக் கடத்திய கொழும்பு வாசிகள் பொலிஸாரால் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு சட்டவிரோதமான முறையில் மாடுகளை கொண்டு சென்ற கொழும்பு வாசிகள் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் , ஒரு மாடு உயிரிழந்த நிலையிலும் மேலும் நான்கு மாடுகள் உயிருடனும் மீட்கப்பட்டுள்ளன.

பலாலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வளலாய் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த பலாலி பொலிஸார் , சந்தேகத்திற்கு இடமான பட்டா ரக வாகனம் ஒன்றினை வழி மறித்து சோதனை இட்டுள்ளனர்.

அதன் போது அந்த சிறிய வாகனத்தினுள் இடவசதிகள் இன்றி ஐந்து மாடுகளை மிக நெருக்கமாக , மாடுகளை சித்திரவதைக்கு உட்படுத்தி , சட்ட விரோ தமான முறையில் கொழும்புக்கு கடத்தி செல்லப்படுவதை கண்டறிந்தனர்.

அதனை அடுத்து வாகனத்தில் இருந்த கொழும்பு - 14 பகுதியை சேர்ந்த இருவரையும் அச்சுவேலி தோப்பு பகுதியை சேர்ந்த ஒருவரையும் கைது செய்தனர்.

அத்துடன் வாகனத்தினையும் அதனுள் அடைத்து வைக்கப்பட்டு இருந்த மாடுகளையும் பொலிஸார் மீட்டனர். அதன் போது ஒரு மாடு உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (நி-33)



காரைநகர் பகுதியில் உள்ள பாடசாலைகளில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

11 ஆவது இலங்கை காலாட்படை அணி ஏற்பாட்டில். 513 ஆவது காலாட்படை தலைமையகத்தின் மேற்பார்வையில். ஸ்ரீ முருகன் பிரதீப லோக அமைப்பினால் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.(படம்:-கஜிந்தன்)


நீங்காத நினைவுகளுடன்

1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 11 . 1964

மறைவு 22 . 02 . 2022

அமரர். கருணாகரன் ரதீஸ்வரன் (ரதி)

(திதி:13.03.2023)

பாரமாகி விட்டோம் என்றோ தூரமாகி போனாய் அப்பா!
வண்ணப் புகைப்படமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறாய்–நம்
வரவேற் பறையில் விதியின் சதி
நினைக்கும் பொழுது ஊற்றெடுக்கிறது விழிகளில் நதி
கடைசிவரை முடிவில்லா பயணம் போல
ஆறாத ரணத்தோடு
பயணிக்க வைத்து விட்டாயே அப்பா…
என்றும் இறுதி நிமிடங்கள் எம் கண்ணுக்குள்ளே.

(14848)

வைரவர் வீதி,
ஏழாலை தெற்கு, ஏழாலை

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்.


# இராசிபலன்

13.03.2023
மாசி 29, திங்கட்கிழமை
சஷ்டி முன்னிரவு 6.57 மணிவரை

விசாகம் காலை 6.23 மணிவரை
அனுசம் பின்னிரவு-5.39 மணி வரை
சுபநேரம் -12.22-01.52 மணிவரை

இராகுகாலம்- 7.52-9.22 மணிவரை
சந்திராஷ்டமம் -
பரணி

வளவன்

**மேஷம்** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், கொடுக்கல் - வாங்கல்களில் கவனம் தேவை, முயற்சிகளில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**ரிஷபம்** சுற்றத்தார் வருகையால் சுகம் கூடும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**கடகம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

**சிம்மம்** தாய் வழி உறவினர் வழியில் எதிர்பார்த்த நன்மைகள் நடைபெறும், வெளியூர்த் தொடர்புகள் சிறப்பாக இருக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, சுபவிரயங்கள் கூடும் நாள்.

**கன்னி** கடமையில் கண்ணுங் கருத்துமாக இருப்பீர்கள், உடன்பிறப்புக்க்ள் உங்களிற்கு உதவ முன்வரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்** உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், எதிர்பாராத தன் வரவுகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** குடும்ப உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாடு குதூகலம் தரும், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** நண்பர்கள் வழியில் சிறு விரயங்கள் ஏற்படலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**மகரம்** பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் முன்னேற்றம் தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.

**மீனம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள்.

இதயக் குமுறலை முழக்கும் கலை இதமான சிரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டிய 16 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது

(அராலி)

யாழ்ப்பாணம் கடற்பரப்பிற்குள் ஊடுருவிய இரு இந்திய விசைப் படகுகளில் பயணித்த 16 தமிழக மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம் புதுக்கோட்டை மற்றும் நாகைபட்டினத்தைச் சேர்ந்த இரு படகுகளில் எல்லை தாண்டிய மீனவர்களே நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் புதுக்கோட்டையைச் சேர்ந்த 81 ஆம் இலக்க படகு அனலைதீவு கடற்பரப்பில் நான்கு மீனவர்களுடனும் நாகைபட்டினம் 7818 ஆம் இலக்கப் படகு 12 மீனவர்களுடன் வெற்றிலைக்கேணி கடற்பரப்பிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவுள்ளனர். (நி-104)





கலாநிதி. ஆறு. திருமுருகன் எழுதிய 'திருக்கேதீச்சர இலக்கிய பெட்டகம்' நூல் வெளியீடும் அகில இலங்கை இந்துமாமன்ற முன்னாள் தலைவர் அமரர். கந்தையா நீலகண்டன் நினைவுப் பேருரையும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அகில இலங்கை இந்துமாமன்ற உப தலைவர் ஆறு. திருமுருகன், ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-சிவசாந்தன்)

# ஜே.சி.பியை கொண்டு வீடொன்றினை இடித்தழிக்க முற்பட்ட இருவர் கைது

## சாவகச்சேரியில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் காணி ஒன்றின் வேலிகளை உடைத்து , காணிக்குள் அத்துமீறி நுழைந்து வீடொன்றினை இடித்து அழித்த பெண் உள்ளிட்ட இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் வீட்டினை இடித்தழிக்க பயன்படுத்திய ஜே.சி.பி வாகனத்தினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள காணி ஒன்றில் உள்ள ஆட்கள் அற்ற வீட்டினை சுற்றி கம்பி தூண்கள் நடப்பட்டு முட்கம்பி வேலிகள் அடைக்கப்பட்டு இருந்தன.

அந்த காணிக்குள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஜே.சி.பி இயந்திரம் ஒன்றினை வாடகைக்கு அமர்த்தி அதனுடன் சென்ற பெண்ணொருவர், வேலிகளை அந்த இயந்திரத்தால் உடைத்து உள்நுழைந்து காணிக்குள் இருந்த வீட்டினை தரை மட்டமாக்கும் செயலில் ஈடுபட்டுள்ளார்.

அது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், காணிக்குள் அத்துமீறி நுழைந்த பெண்ணை கைது செய்ததுடன், அதன் சாரதியையும் கைது செய்தனர்.

இரு தரப்பினருக்கு இடையிலான காணிப்பிரச்சினையே சம்பவத்திற்கு காரணம் என தமது ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் அது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி-33)

# இசை விழாவும் கலைப்போட்டிகளும்

(யாழ்ப்பாணம்)

நல்லூரில் அமைந்துள்ள இளங்கலைஞர் மன்றத்தால் இசைவிழாவும் கலைப் போட்டிகளும் நடத்தப்பட உள்ளன.

இதில் குழுக்கள், சங்கங்கள், மன்றங்கள் இணைந்து கொள்ளலாம். அதற்கான விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னதாக அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என செயலாளர் அறிவித்துள்ளார். (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2782

**யஷ்வந்**

ஒல் குக்கிங் கிறிபேற்றர்ஸ் உப்பு தேவையான அளவு



அது தெரியாம தானேடா
உன் வீடியோ பாக்க வந்தேன்...

**சகிதன்**

இவனுக்கு எப்பிடிம்மா நீ ஓகே சொன்ன?
என்னை அப்பா போல பார்த்துப்பேன்னு
சொன்னார் அத்தை



அவனையே அவங்க அப்பா தான் பார்த்துக்கிறார்.

**தினுஷா**

என்னுடைய வாழ்க்கையில ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு நிமிஷமும் ஏன் ஒவ்வொரு நொடியும்



அது பாட்டுக்குப் போயிடும். நான் பாட்டுக்கு
கம்முனு இருப்பேன்.

**ருத்ரா**




**றெகானா**




**கதீஸ்**

பிரச்சினை என்பது தொலைநோக்கி
போலவே நீ பார்க்கும் பார்வையில்
தான் எல்லாம் அடங்கி இருக்கிறது.
அதை பெரிதாக நினைத்தால்
தெரிதாகத்தான் தோன்றும்.
சிறியதாக நினைத்தால்
பிரச்சினை உனக்கு ஒரு
பொருட்டாகவே தெரியாது.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடக்கன் ஆற்றுப் பகுதியில் தொடரும் மணல் அகழ்வுகள்



(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி பிரதேச சபை எல்லைப் பரப்புக்கு உட்பட்ட முடக்கன் ஆற்றுப் பகுதியில் அனுமதியற்ற மணல் அகழ்வு நடைபெற்று வெளியிடங்களுக்கு மணல் கொண்டு செல்லப்படுவதாக பூநகரி பிரதேச சபையின் தவிசாளர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

இரவும் பகலும் முடக்கன் ஆற்று பகுதியில் இருந்து பெருமளவு மணல் டிப்பர்களில் கொண்டு செல்லப்படுகின்றது.

மணலுடன் ஜெயபுரம் பகுதி யில் டிப்பர்கள் தரித்து செல்வ துடன் பொலிஸார் இது தொட ர்பாக நடவடிக்கைகள் எடுப்ப தில்லை எனவும் தெரிவித் தார்.

பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இம் மணல் அகழ்வு தொடர்பாக தெரியப்படுத்தப்பட்ட போதிலும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இந்த சட்டவிரோத மணல் அகழ்வால் கரியாலை நாகபடுவான் குளத்திற்கான நீர் வரவு பாதித்துள்ளது எனவும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (நி-350)

# தேர்தலை நடத்த பாரிய தடைகள்

## ஜனாதிபதியின் செயற்பாடுகள் வெறுக்கத்தக்கவை என்கிறார் வாசுதேவ

(கொழும்பு)

தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் பாரிய தடைகளை ஏற்படுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

உயர் நீதிமன்றத்தின் இடைக்கால தடையுத்தரவை தற்போது சவாலுக்கு உட்படுத்த முயற்சிப்பது தேர்தலை பிற்போடுவதற்கான முயற்சி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பாராளுமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையில் முரண்பாட்டை தோற்றுவிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்படுகள் வெறுக்கத்தக்கவை என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மின்சார சபையை தனியார் மயப்படுத்துவதற்கு இடமளிக்கப் போவதில்லை- மின்சார தொழிற் சங்கம்

(கொழும்பு)

மறுசீரமைப்பு என்ற போர்வையில் மின்சார சபையை தனியார் மயப்படுத்துவதற்கு இடமளிக்கப் போவதில்லை என மின்சார தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இறுதி சட்டமூலம் பாராளுமன்றில் முன்வைக்கப்படுவதற்கு முன்னதாக மின்சார சபையில் மேற்கொள்ளக் கூடிய மறுசீரமைப்பை அடுத்த வாரத்திற்குள் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் தகவல் வெளியாகியிருந்தது.

அத்துடன் கூட்டு ஒப்பந்தங்களில் இருந்து விலகுவதும் நிதி நிர்வாகம் தொடர்பாக தேவையான புதிய கொள்கை முடிவுகளை எடுப்பதும் அதன் முதற்கட்ட நடவடிக்கை என தெரிவிக்கப்படுகிறது.

மின்சார சபை மறுசீரமைக்கப்படும் என வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவும் பாராளுமன்றில் வைத்து குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து கருத்துரைத்த இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தின் இணைப்பாளர் ரஞ்சன் ஜயலால், மின்சார சபையை தனியார் தரப்பினருக்கு வழங்குவதற்கு அனுமதிக்க முடியாது என தெரிவித்துள்ளார்.

அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் தங்களுக்கு எந்த கொடுக்கல்-வாங்கலும் இல்லை எனவும் மின்சார சபையை விற்பனை செய்வதற்கு முயற்சித்தால் அந்த நடவடிக்கை முறியடிக்கப்படும் எனவும் இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க சம்மேளனத்தின் இணைப்பாளர் ரஞ்சன்ஜயலால் தெரிவித்துள்ளார். (நி)

# யாழ்.பல்கலை மாணவ ஒன்றியம் வசந்த முதலிகே குழு சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்கும் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன் றியத் தினருக் குமாகிய விசேட கலந்துரையாடல்நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.நகரில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் காலை இடம்பெற்றது.

இதன் பொழுது அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் பயங்கரவாத தடைச் சட்டத்தினை முன்னிலைப்படுத்திய போராட்டம் மற்றும் எதிர்காலத்தில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று கோரிக்கை யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திடம் முன்வைக்கப்பட்டது. (நி-33)



"ஓம் ஸ்ரீ வீராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

## வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

சுழிபுரம்

**'வருடாந்த பங்குனிப் பொங்கல் உற்சவம்'**

அம்பிகை அடியார்களே...

தொல்லுலகும் போற்றும் சுழிபுரப் பதிதனில் கோவில் கொண்டருளும் பத்திரகாளித் தாயினுடைய வருடாந்தப் பொங்கல் உற்சவம்

- **14.03.2023 நிகழவிருக்கும் விளக்கு வைப்பு டன் ஆரம்பமாகி முதலாம் பொங்கல்.**
- **21.03.2023 செவ்வாய்க்கிழமையும் எட்டாம் மடை எனப்படும் இரண்டாம் பொங்கல்.**
- **28.03.2023 செவ்வாய்க்கிழமையும் அம்பாளுடைய திருவருட் துணையுடன் இடம்பெறவிருப்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.**

குறிப்பு- பொங்கல் உற்சவ காலங்களில் வியாபாரங்களில் ஈடுபடவுள்ளோர் 19.03.2023 ஞாயிறு மு.ப 10.00 மணிக்கு ஆலய காரியாலயத்தில் பதிவு செய்து தங்கள் வியாபாரத்திற்குரிய தற்காலிக இடங்களை பெற்றுக் கொள்ளவும்.

" சீராருஞ் சுழிபுரத்து பத்திரகாளித்தாயை திடங் கொண்டு சிந்தித்திருப்போர்க்கு தீ தொன்று மில்லை யிப் பாரினிலே "

ஆலய பரிபாலன சபையினர்.


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: சூரி 5 செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/13394 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 17 சூரி 6 செவ் 5 இல்<br>தகைமை/தொழில்: Bsc<br>எதிர்பார்ப்பு: தகுந்த வரன்<br>தொ.இ: G/13474 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: சூரி . செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: சுவிஸ் PR இல்லை<br>எதிர்பார்ப்பு: PR உள்ள வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/13404 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 4<br>கி.பா: சூரி . செவ் 11 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: நுண்கலைமானி பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/13475 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>கி.பா: சூரி 11 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்: A/L அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13405 | பிறப்பு: 1998 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: சூரி . செவ் 11 இல்<br>தகைமை/தொழில்: Bsc 3 ஆம் வருட மாணவி<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/13480 |
| பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: சூரி 3 செவ் 12 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L விவசாயம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/13406 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: சூரி 10 செவ் 11 இல்<br>உயரம்: 148 cm<br>தகைமை/தொழில்: அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/13483 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 123





"புலவர்களே! நீங்கள் இப்போது விடைபெற்றுக் கொள்ளலாம்!" என்றார் கோட்டைத் தளபதி.

புலவர்கள், மன்னருக்கு "வாழி!" கூறிக் கோஷித்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள்.

குந்தவை தேவிக்குக் கொண்டு வந்த ஓலையைக் காணாததால் மனக்கலக்கம் அடைந்திருந்த வல்லவரையன், அப்புலவர்களுடனே தானும் நழுவி விடலாம் என்று எண்ணி எழுந்து கூட்டத்தின் நடுவில் நடந்து சென்றான்.

ஆனால், அவன் எண்ணம் நிறைவேறவில்லை. வாசற்படியை நெருங்கியபோது ஒரு வலிய இரும்புக்கை அவனுடைய கையின் மணிக்கட்டை இறுகப் பிடித்தது. வல்லவரையன் நல்ல பலசாலிதான்! ஆயினும் அந்த வஜ்ரப் பிடியின் வேகம் அவன் உச்சந்தலை முதலாவது உள்ளங்கால் வரையில் ஒரு குலுக்குக் குலுக்கி அவனைச் செயலிழந்து நிற்கும்படி செய்துவிட்டது.

அவ்விதம் பிடித்த இரும்புக்கரம் சின்னப் பழுவேட்டரையரின் கரம் தான் என்பதை நிமிர்ந்து பார்த்துத் தெரிந்து கொண்டான்.

புலவர்கள் தரிசன மண்டபத்திலிருந்து வெளியேறினார்கள்.

**இருபத்தொன்பதாம் அத்தியாயம்**
**"நம் விருந்தாளி"**

புலவர்கள் சென்ற பிறகு அரண்மனை மருத்துவர் சக்கரவர்த்திக்கு மருந்து கலந்து கொண்டு வந்தார். மலையமான் மகளான பட்டத்தரசி அதைத் தன் திருக்கரத்தால் வாங்கிக் கணவருக்குக் கொடுத்தாள்.

அதுவரை பொறுமையாய்க் காத்திருந்த சின்னப் பழுவேட்டரையர், வந்தியத்தேவனைப் பிடித்தபிடி விடாமல் இழுத்துக் கொண்டே சக்கரவர்த்தியின் அருகில் போய்ச் சேர்ந்தார்.

"பிரபு! புது மருந்தினால் ஏதாவது பலன் தெரிகிறதா?" என்று கேட்டார்.

"பலன் தெரிகிறதாக மருத்துவர் சொல்லுகிறார் தேவியும் சொல்கிறார் ஆனால் எனக்கென்னவோ நம்பிக்கை உண்டாகவில்லை. உண்மையைச் சொன்னால், தளபதி! இதெல்லாம் வீண் முயற்சி என்றே தோன்றுகிறது. என் விதி என்னை அழைக்கிறது. யமன் என்னைத் தேடிக் கொண்டு பழையாறைக்குப் போயிருக்கிறான் என்றே நினைக்கிறேன். அங்கே நான் இல்லையென்று அறிந்ததும், இவ்விடம் என்னைத் தேடிக் கொண்டு வந்து சேருவான்!"

"பிரபு! தாங்கள் இப்படி மனமுடைந்து பேசக் கூடாது. எங்களையெல்லாம் இப்படி மனங்கலங்கச் செய்யக் கூடாது. தங்கள் குல முன்னோர்கள்"

"ஆ! என் குல முன்னோர்கள் யமனைக் கண்டு அஞ்சியதில்லையென்று சொல்லுகிறீர்! எனக்கும் என் குல முன்னோர்கள் பலரைப் போல் போர்க்களத்தில் முன்னணியில் நின்று போர் செய்து உயிர் விடும் பாக்கியம் கிடைக்குமானால், அத்தகைய மரணத்துக்குச் சிறிதும் அஞ்ச மாட்டேன் சோர்வும் கொள்ள மாட்டேன். உற்சாகத்துடன் வரவேற்பேன். என்னுடைய பெரிய தகப்பனார் இராஜாதித்தியர் தக்கோலத்தில் யானை மேலிருந்து போர் புரிந்தபடியே உயிர் நீத்தார்.

சோழ குலத்தின் வீரப் புகழைத் தக்கோலம் போர்க்களத்தில் என்றென்றும் நிலைநாட்டினார். 'யானை மேல் துஞ்சிய தேவர்' என்று புகழ்பெற்றார். நான் என்ன புகழைப் பெறுவேன்? 'நோய்ப் படுக்கையில் துஞ்சிய சுந்தர சோழன்' என்றுதானே பெயர் பெறுவேன்? என்னுடைய இன்னொரு பெரிய தகப்பனார், கண்டராதித்த தேவர் சிவபக்தியில் ஈடுபட்டு மரண பயத்தை விட்டிருந்தார்.

ஸ்தல யாத்திரை செய்வதற்கு மேற்குக் கடற்கரை நாடுகளுக்குப் போனார். அங்கேயே காலமானார். 'மேற்கெழுந்தருளிய தேவர்' என்று அவரும் பெயர் பெற்றார். அவரைப் போன்ற சிவபக்தனும் அல்ல நான் ஸ்தல யாத்திரை செய்யவும் இயலாதவனாகி விட்டேன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## எள்ளு போச்சு! எண்ணெய் வந்தது!

( தொடர்ச்சி....)

நீங்கள் அவற்றை எண்ணெய் ஆக்குவதற்காக ஏன் துன்பப்பட வேண்டும்?" எள்ளுக்குப் பதில் நூறு பீப் பாய் எண்ணெய் தருவதாக அவை முடிவு எடுத்தன.

உங்களுக்கு எள் வேண்டுமா? எண்ணெய் வேண்டுமா? இதைத் தெரிந்து வருவதற்காக என்னை அனுப்பி வைத்தன. உங்களுக்கு என்ன வேண்டும்? சொல்லுங்கள்" என்று நடுங்கியபடியே கேட்டது அது.

"இனிமேல் எனக்கு எள் வேண்டாம். எண்ணெயாகவே தாருங்கள். ஏதேனும் தவறு நடக்குமானால் உங்கள் அனைவரையும் தொலைத்து விடுவேன்.



ஓடு." என்று விரட்டினான் அவன்.

எப்படியோ தப்பித்தோம் என்று ஒரே ஓட்டமாக ஓடியது அது. மூச்சு வாங்கக் காட்டை அடைந்தது.

அதன் நிலையைப் பார்த்த மற்ற பேய்களும் என்ன நடந்திருக்கும் என்பது புரிந்தது.

"என்ன புதுப்பேயே? வீரம் பேசிவிட்டுச் சென்றாயே? அவனைக் கொன்று விட்டாயா?" என்று கேலியாகக் கேட்டது ஒரு பேய்.

"உங்கள் பேச்சைக் கேட்காதது தப்புதான். முரடனான அவனிடம் நான் நன்றாகச் சிக்கிக் கொண்டேன். எனக்குப் பெரிய சூடு வைத்து இருப்பான். அதை இப்பொழுது நினைத்தாலும் என் உள்ளம் நடுங்குகிறது" என் அறிவு வேலை செய்தது. எப்படியோ அவனிடம் இருந்து தப்பி விட்டேன்? என்றது புதுப்பேய்.

"அவன் பெரிய ஆளாயிற்றே! அவனிடம் என்ன சொல்லித் தப்பினாய்?" என்று கேட்டது ஒரு கிழப் பேய்.

"நூறு மூட்டை எள்ளாகத் தருவதா? அல்லது நூறு பீப்பாய் எண்ணெயாகத் தருவதா? என்று கேட்டு வர நீங்கள் அனுப்பியதாகச் சொன்னேன். அவனும் இனிமேல் நூறு பீப்பாய் எண்ணெயே தருமாறு கட்டளை இட்டான்" என்று நடந்ததைச் சொன்னது புதுப்பேய்.

"என்ன காரியம் செய்துவிட்டாய். நூறு மூட்டை எள்ளைக் கொடுத்துவிட்டு நிம்மதியாக இருந்தோம் இனிமேல் நூறு பீப்பாய் எண்ணெய் தருவதாகச் சொல்லி விட்டு வந்திருக்கிறாய்.

அவ் வளவு எண்ணெயைச் சேர்ப்பதற்காக நாங்கள் தூக்கம் இல்லாமல் துன்பப்பட வேண்டும். நாங்கள் தடுத்தும் நீ கேட்கவில்லையே. இனி என்ன செய்வது" என்று வருத் தத்துடன் புலம்பின அங்கிருந்த பேய்கள்.

எல்லாப் பேய்களும் தங்கள் தலைவிதியை நொந்து கொண்டன. ஆண்டுதோறும் உழவனுக்கு நூறு பீப்பாய் எண்ணெயைத் தந்து வந்தன.

"தன் அறிவுக் கூர்மை தன்னைக் காப்பாற்றியது. உழைக்காமலேயே வளமாக வாழும் வாய்ப்பும் வந்தது" என்று மகிழ்ந்தான் அவன்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவம் தவறிய மழையும் நிதானம் தவறிய மனிதனும் பயனற்றுப் போவது உறுதி.
– பகவத்கீதை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மாடு பிடிக்கின்ற சட்டமும் தேர்தலை நடத்தும் அதிகாரமும்

குழப்பமான சட்டங்கள், தெளிவற்ற விதிமுறைகள், ஒழுங்கற்ற நிர்வாகங்கள் எந்த நாட்டில் உள்ளதோ அந்த நாடு எந்த வகையிலும் முன்னேற்றமடையாதென்பது நிறுதிட்டமான உண்மை.

அந்தவகையில் இலங்கையில் இருக்கக்கூடிய சட்டவிதிமுறைகள், நடைமுறைகள், நிர்வாக ஒழுங்குகள் பழுதுபட்டவையாக, மனித சமத்துவமற்றதாக, சீரற்றதாக இருப்பதைக் காணமுடியும்.

உதாரணத்துக்கு வயல் விதைப்புக் காலம் ஆரம்பித்துவிட்டால், மாடுகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவிப்புகள் விடுக்கப்படும்.

இருந்தும் சிலர் மாடுகளை அவிட்டுவிட, அவை முளைத்த நெற்பயிர்களைத் துவம்சம் செய்து விடுகின்றன.

இங்குதான் கட்டாக்காலி மாடுகளை பிடிக்கின்ற ஏற்பாடுகள் இல்லையா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால் ஒன்றல்ல. இரண்டு சட்டவிதிமுறைகள் இருக்கின்றன.

அதில் ஒன்று வயலுக்குள் மாடுகள் நின்றால் அதனைப் பிடிக்கின்ற அதிகாரம் கமத்தொழில் திணைக்களத்துக்குரியது.

அதேநேரம் அந்த மாடு தெருவில் – வீதியில் நிற்குமாயின் அதனைப் பிடிக்கின்ற அதிகாரம் அந்தந்த உள்ளூராட்சி சபைகளுக்குரியதாகும்.

ஆம், நெற்பயிர்களை மேய்ந்து கொண்டிருக்கும் மாடுகளை கமத்தொழில் திணைக்களத்தின் உத்தரவில் பிடிக்கும்போது, அந்த மாடுகள் வயல்வெளி தாண்டி வீதிக்கு வந்து விட்டால், அதனைப் பிடிக்கின்ற அதிகாரம் கமத்தொழில் திணைக்களத்துக்கு இல்லாமல் போகிறது.

இப்போது பிரதேச சபையோ அன்றி நகர சபையோ அந்த மாட்டைப் பிடிக்க வேண்டும்.

ஆக, புத்திசாலித்தனமான மாடுகள் கமத்தொழில் திணைக்களத்தார் வருகின்ற போது, வீதியிலும் பிரதேச சபை வருகின்றபோது வயல்களிலும் நின்றால், அந்த இரு தரப்பினரிடமும் பிடிபடாமல் தப்பித்துக் கொள்ள முடியும்.

இங்கு மாடு பிடிப்பு என்பது நடக்கின்ற காரியம் இல்லை என்பதாக நிலைமை ஆகிவிடுகின்றது.

இதனால் வேளாண் செய் விவசாயிகள் பெரும் நட்டத்தை அனுபவிக்கின்றனர்.

இவ்வாறு மாடு பிடிக்கும் சட்டம் எவ்வாறு தெளிவற்றதாக – சிக்கல் நிறைந்ததாக இருக்கிறதோ அதேபோன்றதுதான் இந்த நாட்டின் தேர்தல் பணியும் உள்ளது.

ஆம், தேர்தலை நடத்த வேண்டிய பொறுப்பு தேர்தல் திணைக்களத்துக்குரியது. எனினும் அதற்கான நிதியை ஒதுக்குகின்ற பொறுப்பு நிதியமைச்சினுடையது.

அதாவது தேர்தல் நடக்குமென்ற அறிவித்தலை தேர்தல் திணைக்களம் விடுக்கும்.

ஆனால் அதற்கான நிதியை வழங்க முடியாதென நிதியமைச்சு கூறும்.

இதனால் தேர்தல் என்பது நடக்குமா? நடக்காதா? என்ற சிக்கலுக்குட்பட்டு ஜனநாயகத்தை கேள்விக்குட்படுத்துகிறது.

இங்குதான் மாடு பிடிக்கும் சட்ட விதிமுறையும் தேர்தலை நடத்துகின்ற அதிகாரமும் ஒன்றாகப் பொருள்படுகிறது.

# கருத்துக்களாலும் சிந்தனைகளாலும் மட்டும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

கருத்துக்களாலும் சிந்தனைகளாலும் மட்டும் ஒரு நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது இந்நாட்டை கட்டியெழுப்ப ஒரு திறமையான குழு தேவை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அண்மையில் தெமட்டகொட பிரதேசத்தில் இடம்பெற்றவட்டார மட்டக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மொட்டுக்கோ அல்லது அதற்கு துணைபோகும் குழுக்களாலோ மக்கள் முன் செல்ல முடியாததால் தேர்தலை ஒத்திவைத்துக் கொண்டிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

திருடர்களைப் பிடிப்பதாக வெறும் பேச்சுக்களைப் பேசுவதை விடுத்து திருடர்களை பிடிக்கும் வேலைத்திட்டம் ஐக்கிய மக்கள் சக்தியிடம் இருப்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இதற்காக மேற்கொள்ள முடியுமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ம-7)

## அரச ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு

### அரசாங்கம் பரிசீலனை

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து பொருளாதார நிலைமையை மதிப்பிட்டதன் பின்னர் இந்த ஆண்டின் 4 அவது காலாண்டில் அரச ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நிதி இராஜாங்க நிதியமைச்சர் ஷெஹான் சேமசிங்க ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

6 மாதங்களுக்குப் பிறகு, மறுசீரமைப்புத் திட்டமும் நடைமுறையில் இருப்பதால், பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

அதன் பின்னரே மதிப்பீடும் மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், வரிக்கொள்கையில் மாற்றங்கள் இருக்காது என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்புக்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் உள்ளன, அவற்றைத் தாண்டி அரசாங்கத்தினால் செயல்படமுடியாது.

ஒப்பந்தங்களை மீறினால்அது அடுத்த தவணை நிதியுதவிகளைப் பாதிக்கும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை சர்வதேச நாணயநிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிக்கான முதல் தவணையை இந்த மாத இறுதிக்குள் அரசாங்கம் எதிர்பார்க்கிறது என்றும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## உலக வங்கியிடமிருந்து இலங்கைக்கு நிதி உதவி

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பணத்தைப் பெறுவதற்கு மேலதிகமாக, உலக வங்கி 500 முதல் 1500 மில்லியன் டொலர் வரையிலான தொகையை இலங்கைக்கு வழங்க உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர், ஆசிய அபிவிருத்தி வங்கியும் சுமார் பத்து இலட்சத்து அறுநூறு டொலர்களை வழங்க தயாராக இருப்பதாக குறிப்பிட்டார்.

நான்கு வருடங்களில் 8 தடவைகளில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 3 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் தொகையை இலங்கை பெறும் என்றும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இந்த மாத இறுதிக்குள் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று நம்புகிறோம். பின்னர் அதே நேரத்தில் நாம் சுமார் முந்நூற்று ஐம்பது மில்லியன் டொலர்களைப் பெறவேண்டும் என்றார். (ம-7)

## மாதகலில் களைகட்டிய முரல் மீன் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாதகல் பகுதியில் முரல் மீன் படுகை அதிகரித்த காலமாக இம்மாதம் காணப்படுகின்ற நிலையில் முரல் மீன் விற்பனை அதிகரித்து மாதகல் மேற்கு கடற்கரை இரவு நேரங்களில் விழாக்கோலம் கொண்டு காணப்படுகின்றது.

மாதகல் கடற்பரப்பில் பிடிக்கப்படுகின்ற முரல் மீன் தனித்துவமானதும் சுவை வாய்ந்ததுமாக காணப்படுகின்ற நிலையில் அதிகளவானோர் குறித்த கடற்பரப்பிற்கு வருகை தந்து படகுகளில் பிடித்து வரப்படும் மீனை உடனடியாகவே கொள்வனவு செய்வதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

ஒரு மீன் 70 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இந்நிலையில் வடமாகாண சுற்றுலா பணியகம் இக்காலப் பகுதியை மாதகல் பகுதியின் சுற்றுலாவிற்கு உகந்த காலமாக அடையாளப்படுத்தியுள்ளது. (ம-7)

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

மொறவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்பிட்டிக்குளம் பகுதியில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் வில்கம் விகார பகுதியைச் சேர்ந்த 53 வயதான எம்.ஏ.விதானகே ஹரிச்சந்திர என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்வம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மொறவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## இலங்கையின் 100 கடல் பகுதிகளில் எண்ணெய் ஆய்வு

இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை (PDASL) 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டிற்குள் ஆர்வமுள்ள வெளிநாட்டு நிறுவனங்களுக்கு இலங்கையின் 100 கடல் பகுதிகளுக்கு மூன்று வருட எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வு உரிமங்களை வழங்க தயாராகி வருகிறது.

இலங்கை பெற்றோலிய அபிவிருத்தி அதிகாரசபை தலைவர் சாலிய விக்ரமசூரிய, ஆய்வு உரிமங்களை வழங்குவதற்கு தேவையான அனைத்து செயல் முறைகளும் நடைமுறையில் இருப்பதாகவும், பல வெளிநாட்டு நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளதாகவும், தற்போது பெறப்பட்ட விண்ணப்பங்களை செயல்படுத்தி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## திருமலையில் பேருந்து மோதியதில் காட்டு யானை உயிரிழப்பு

திருகோணமலை பிரதான வீதியில் பயணிகள் பஸ்ஸில் காட்டு யானை ஒன்று மோதி உயிரிழந்துள்ளதாக கல்ஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டு யானை மோதியதில் பயணிகள் பஸ்ஸிற்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்ஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை - யாழ்.பிரதேசத்தில் வல்லான், ஆலடிச்சந்தி, இறுப்பிட்டி,கேரைதீவு, குறிகட்டுவான், மடத்துவெளி, நடுவுக்குறிச்சி, பெருங்குளம் அம்மன் கோவிலடி, வேலணை, புங்குடுதீவு அரசடிச் சந்தி, புங்குடுதீவு ஊரதீவு ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27 அடி உயரமான நடராஜர் சிலை பிரதிஷ்டை செய்து வைப்பு






(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை தீர்மானத்திற்கு அமைவாக நடராஜர் பணி குழுவினால் ஆனையிறவு பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 27 அடி உயரமான நடராஜர் சிலை நேற்று பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் இந்து மத சிவாச்சாரியார்கள், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் எனப் பலர் கலந்து கொண்டனர். (நி-33-315)




கிளிநொச்சி முருகானந்த ஆரம்பப் பாடசாலையின் கடந்த ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் பாடசாலை அதிபர் க.கருணானந்தன் தலைமையில் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் க.அ.சிவனருள்ராஜா, கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ. விஜயநாதன், பாடசாலையின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்-யதுபாஸ்கரன்)

### தருமபுரம் பகுதியில்

# இளம் குடும்பஸ்தர் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

- சந்தேக நபர்கள் மூவர் கைது
- வாள்கள் மீட்பு



(தருமபுரம்)

தருமபுரம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் இரவு 8 மணி அளவில் குறித்த நபர் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக தனியார் கடை ஒன்றுக்கு சென்ற பொழுது பத்துக்கு மேற்பட்டோர் இணைந்து அவர் மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மூன்று சந்தேக நபர்களை கைது செய்ததுடன் அவர்கள் பயன்படுத்திய வாள்கள் மூன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. காயமடைந்தவர் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-316)

### மாங்குளத்தில் அமைந்துள்ள

# கால்நடைகளுக்கான சிகிச்சை நிலையத்தை மீள இயங்க வைக்குமாறு கோரிக்கை

(அக்கராயன்)

மாங்குளம் பகுதியில் கால்நடைகளுக்கான சிகிச்சை நிலையம் அமைக்கப்பட்டுள்ள போதிலும் அந்நிலையம் செயற்பாட்டு நிலையில் இல்லாததால் பெரும் சிரமத்துக்குள்ளாவதாக விலங்கு வளர்ப்பாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். பெரும் சிரமத்திற்கு மத்தியிலும் ஒட்டுசுட்டானுக்கு சென்றே தம் கால்நடைகளுக்கான சிகிச்சைகளை பெற்று வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்நிலையை கருத்திற் கொண்டு மாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள கால்நடை சிகிச்சை நிலையத்தை செயற்படுத்துமாறு கோரி முல்லைத்தீவு மாவட்ட கால்நடை சுகாதார திணைக்களப் பணிப்பாளரிடம் கடந்த வெள்ளிக்கிழமை மனு ஒன்றை சமர்ப்பித்திருந்தனர். (நி-350)

# பேருந்து- மோ.சைக்கிள் மோதி'விபத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் இ.போ.ச பேருந்துடன் மோட்டார்சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிள் கடுமையாக சேதமடைந்துள்ள போதிலும் அதில் பயணித்தவர்கள் உயிராபத்துக்கள் எவையும் இன்றி தெய்வாதீனமாக தப்பித்துள்ளனர்.

குறித்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-30)



முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான தேசிய சாதனையாளர் கௌரவிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் க.திருக்குமரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் கலந்து கொண்டார். (படம் - கிருஷ்ணகுமார்)

# தேர்தல் பிரசாரக் கூட்டத்தை ஆரம்பித்தார் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆளும்கட்சியின் முதலாவது பிரசாரக் கூட்டம் மொனராகலையில் இடம்பெற்றது.

உள்ளூராட்சித் தேர்தலை அடுத்த மாதம் 25 ஆம் திகதி நடத்துவதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ள நிலையில் இந்தக் கூட்டம் இடம்பெற்றுள்ளது. இதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவம் செய்யும் பல அமைச்சர்கள் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 120 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 300 | 340 | 300 | 350 |
| தக்காளி | 120 | 80 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| கோவா | 80 | 100 | 80 | 120 |
| கரட் | 100 | 170 | 140 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 60 |
| புடோல் | 180 | 160 | 160 | 240 |
| வாழைக்காய் | 200 | 140 | 140 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 260 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 130 | 150 |
| பாகற்காய் | 200 | 400 | 400 | 600 |
| வெண்டக்காய் | 350 | 280 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 9C | 80 | 160 |
| பயற்றங்காய் | 250 | 180 | 200 | 300 |
| லீக்ஸ் | 120 | 230 | 250 | 280 |
| பீற்றூட் | 200 | 180 | 200 | 250 |
| கறிமிளகாய் | 350 | 200 | 350 | 320 |
| முருங்கைக்காய் | 1800 | 2000 | 1500 | 1800 |
| போஞ்சி | 180 | 250 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 130 | 80 | 240 | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 100 | 140 |
| தேசிக்காய் | 250 | 250 | 150 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 300 | 300 | 250 | 350 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 100 | 200 |
| முள்ளங்கி | 60 | 70 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 140 | 50 | 60 |
| ஈரப்பலா | 80 | 140 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமான ரிக்கெட்...

டுக்களின் விலை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதிகளவான டொலரின் உள்வருகையால் ரூபாயின் பெறுமதி கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டணங்கள் குறைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் விமான ரிக்கெட்டுக்களின் விலையைக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## நாட்டின்...

அமுல்படுத்தும் அதிகாரிகள் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை மற்றும் தடிகளை பயன்படுத்தியதாக முறைப்பாடுகளும் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பான பிரதான அமைப்பாக எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தும் வகையில் இந்த நிலைமை குறித்து பரிசீலிக்கப்பட வேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## உள்ளூராட்சி...

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த 2023ஆம் ஆண்டுக்கான தேசிய சட்ட சம்மேளனத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

இலங்கையில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்ற கேள்விகள் எழுந்துள்ள நிலையில் அமெரிக்கத் தூதுவர் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். (ம-7)

## எரிபொருள்...

எரிபொருள் இறக்குமதியில் கிடைக்கும் நிவாரணத்தை மக்களுக்கு வழங்க எதிர்பார்ப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விலை சூத்திரத்தின்படி, ஒவ்வொரு மாதமும் முதல் நாள் எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்படுகிறது.

இதன்படி எதிர்வரும் ஏப்ரல் மாதம் இடம்பெறவுள்ள விலைத் திருத்தத்தில் எரிபொருள் விலையை குறைக்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (ம-7)

## உரிய தினத்தில்...

ரூபாய் கூட கிடைக்கவில்லை என நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்தார்.

மேலும் இம்மாதம் 20ஆம் திகதிக்குள் தமக்கான நிதி கிடைக்காவிட்டால் நாம் நீதிமன்றம் சென்று திறைசேரியிடம் நிதிவிடுவிக்காமை தொடர்பில் முறையிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

*(மேலும் ஒரு செய்தி உள்ளே)*

## தமிழர்களின்...

அனைத்துப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்கும் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஒன்று நேற்றுக் காலை 10.00 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

குறித்த சந்திப்பின்பின் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தமிழ் பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள், மருத்துவர்கள் கைது செய்யப்பட்டபோது ஏன் மௌனம் காத்தீர்கள்? என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே பதில் வழங்காமல் மௌனம் காத்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த வசந்த முதலிகே பயங்கரவாத தடைச் சட்டம் இந்த நாட்டில் இருந்து முற்றாக நீக்கப்பட வேண்டும். அதனை நீக்குவதற்கு பல்கலைக்கழகங்கள் மாணவர்கள் ஒன்றாக இணைந்து தொடர் போராட்டம் ஒன்றை நடத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாது வடக்கு மக்களுடைய பிரச்சினைகளை நன்கு அறிவதாகவும் அவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்க நாங்கள் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். இதன்போது கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர் 30 வருடங்களுக்கு மேலாக பயங்கரவாத தடைச் சட்டம்மூலம் தமிழ் மக்கள் நசுக்கப்பட்டு வருகிறார்கள்.

அப்போது குரல் கொடுக்காத நீங்கள் ஏன் தற்போது பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என நினைக்கிறீர்கள்.

அது மட்டுமல்ல உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தின் பின் பல முஸ்லிம்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டபோது அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏன குரல் கொடுக்கவில்லை என கேள்வி எழுப்பினார்.

இதன்போது வசந்த முதலிகே தமிழ் - முஸ்லிம் மக்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டமை தொடர்பில் எந்த பதிலும் வழங்கவில்லை மாறாக அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் மற்றும் 13வது திருத்தச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டுமென கூறியதுடன் வடக்கு பல்கலைக்கழகம் மாணவர்கள் தம்முடன் இணைந்து குரல் கொடுக்க முன்வருமாறு அழைப்பை விடுத்துச் சென்றார். (ம-7,33,104)

## தேர்தல்கள்...

சுமத்தியுள்ளார்.

கட்டுவன பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டை அழித்து, மக்களின் வாழ்வை சீரழித்து மக்களை அழிவின் விளிம்பிற்கு இட்டுச் சென்ற முன்னாள் அரசாங்கத்திற்கும், தற்போதைய அரசாங்கத்திற்கும் தேர்தல் என்ற வார்த்தையை கேட்டாலே அச்சம் எழுந்துள்ளது.

அவர்களால் மக்களிடம் செல்ல முடியாததாலேயே அந்நிலை எனவும், இதன் காரணமாகவே யானை, காக்கை, மொட்டு தரப்புகள் மூன்றும் தேர்தலை ஒத்திவைக்கும் சதியில் ஈடுபட்டு வருவதாக எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்தார்.(ம-7)

## மக்கள்...

வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

[illegible] நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அரசியலமைப்புக்கு அமைய தீர்மானங்களை முன்னெடுத்தாலும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தேர்தலுக்கு இணக்கம் தெரிவித்தால் மாத்திரம்தான் தேர்தல் இடம்பெறும் என பொதுஜன பெரமுனவின் உள்ளக பேச்சுவார்த்தையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தலை நடத்த இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுஜன பெரமுனவுக்கு வாக்குறுதி வழங்கிய காரணத்தினால்தான் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக கிரிக்கெட் விளையாடுகிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சியில் இருக்கும்போது ஜனநாயகம் பற்றி முழு உலகத்துக்கும் பாடம் கற்பிப்பார்கள். ஆனால், அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் சர்வாதிகாரம் குறித்து உலகுக்கு பாடம் கற்பிப்பார்கள் என்றார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 12/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1512
துலாம் 6 9 2 5 4 2

தன நிதானய
திகதி - 2023.03.12
சீட்டிழுப்பு இலக்கம் - 1087
G 26 36 53 74

கொவிசெத
திகதி 2023.03.12
சீட்டிழுப்பு இலக்கம் 3299
W 03 14 63 67

மெகா பவர்
திகதி 12/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1405
J 21 01 11 20 61

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.03.12
சீட்டிழுப்பு இலக்கம் 366
மிதுனம் 22 49 51 53 மிதுனம்

மஹஜன சம்பத
திகதி 2023/03/12
சீட்டிழுப்பு இலக்கம் 5057
H 0 6 7 1 8 3

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2032
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.12
தினம் ஞாயிற்றுக்கிழமை
Q 24 38 44 60
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,343,480/-

சனிதா
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.12
சீட்டிழுப்பு இல : 4193
வர்ணம் : இளஞ்சிவப்பு
ரூ. 4,315,860/-
32 37 68 72 D

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 299
சீட்டிழுப்பு திகதி 2023.03.12
ஞாயிற்றுக்கிழமை
15 27 34
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,597,520/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,848,128/-
திகதி 2023-03-12
வெற்றி வாரம் 3744
வர்ணம் ஊதா
11 13 22 44 சிம்மம்
ரூ. 8,590,380/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 20 07 23 46 65
சீட்டிழுப்பு வாரம் 1208
வர்ணம் மஞ்சள்
2023.03.12 ஞாயிற்றுக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 312,802,504.20
DLB

அத கோடிபதி
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1858
வர்ணம் : இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.12
ரூ. 3,921,380/-
08 16 20 69 D


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14825)

**076 825 7716** (ஆகாஸ்)



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பொற்பதி வீதியிலுள்ள செருக்கபுலம் ஒழுங்கையில் 03 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**077 233 8321 / 077 540 8208** (14857)



**நீங்கள் கடுமையான இருமல், சளி மற்றும் இளைப்பினால் அவதிப்படுகின்றீர்களா?**

**இன்றே பாவியுங்கள்.**

**சித்தாரா துளசி அசமோதகம் பாணி**

ஆதிகால தேசிய ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த அற்புத. பாணி நுரையீரல், சுவாச நாளங்களில் இருக்கும் சளியைப் போக்குவதுடன் இருமல், சளி, இளைப்பு, வாய்வு, அஜீரணம் போன்ற நோய்களிற்கு உடன் நிவாரணம் வழங்கும்.

யாழ். குடா நாட்டின் அனைத்து பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA SIDDHAYURVEDA PHARMACY.

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா ®
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி : 021 222 2567

(C-6147) (குறிப்பு : சத்திரச்சந்திக்கு அண்மையில்)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தாவடியில் 5 பரப்பு காணி விற்பனைக்கு**

- மூன்று பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- KKS வீதியில் இருந்து இரண்டாவது காணி
- தாவடி சந்தியில் இருந்து 100 m தூரத்தில்

**076 436 5814** (14882)



## மணமகள் தேவை

யாழ்: இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1990 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 17 பாவம் பூராடம், ஒரே மகன் சொந்தமாக வீடு, ஓட்டோ உண்டு. தனியார் நிறுவனத்தில் நிரந்தர வேலையுடன் உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை)

**074 018 2267**
**077 625 2654** (14876)



## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| இனம் | :- | இந்து கௌரவ குடும்பம் (V) |
| ஆண்டு | :- | 1989 |
| நட்சத்திரம் | :- | பரணி |
| கிரக பாவம் | :- | 22 |
| செவ்வாய் | :- | 8 |
| தொழில் | :- | உபதபாலதிபர் |

எதிர்பார்ப்பு :- ஆசிரியர் அல்லது அரச திணைக்கள உத்தியோகம் இருத்தல் வேண்டும் அத்துடன் வடமராட்சிக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும் தொடர்புக்கு :-

**077 864 9878**
**077 126 0182** (Viber) (14866)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6149)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**

- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6149)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 076 097 3127



## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1991, விசாகம் 2 ஆம் பாதம் துலாம் இராசி MBBS டாக்டர் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. கிரகபாவம் – 11

**076 561 4313** (14873)



## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

**30% விலைக்கழிவில்**



- அழகுசாதன பொருட்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- கவரிங் நகைகள்
- சோடினை சாமான்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- மணிக்கூட்டு வகைகள்
- கிறீம் வகைகள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- பாட்டா வகைகள்
- தையல் உபகரணங்கள்
- சில்வர், மாபிள், கிளாஸ் வகைகள்

என்பன கொழும்பு விலையில் விற்பனைக்கு உண்டு. (14846)

## சரவணபவன் பென்சி கவுஸ்

இல.26/1,
ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்

உரிமையாளர்
தே.கலைத்தாசன்(கரன்)
077 468 3354



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 72 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14837)

**074 318 7263 | 076 755 8606**


## 5ஆம் ஆண்டு நினைவலைகள்...



தோற்றம் 18.02.1969 | மறைவு 07.03.2018

அமரர் திருமதி **தயாளன் ரூபாவதி** (சாந்தி)

(திதி : 13.03.2023)

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
எக்காலமும் எம்முடன் வாழ்வீர்கள்

கரையும் கண்ணீரில்
நிறையும் நினைவுகளுடன்
கணவர் இ.தயாளன் மற்றும் பிள்ளைகள்

" ரூபமஹால்"
வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை,
புத்தித்துறை
Tel No: 077 652 9017

ராஜன் வீடியோ ஸ்ரூடியோ
பருத்தித்துறை
(C-6148)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.